லும் தேர்ந்து எழுத, அதாவது ஆப்ஷன் கேள்விகள் பழைய வினாத்தாளில் உள்ளபடியே அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பாடங்களில் பழைய மாதிரி வினாத்தாளில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றும், ஏற்கனவே உள்ள முறை நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது.

இப்போது மாணவர்களில் சிலர் இப்படிப்பட்ட ஐயங் களைத் தூண்டிவிட்டு ஒரு கிளர்ச்சியை நடத்துவது ஒரு பெரிய, தாங்கள் தனிப்பட்ட முறையில் தனித் தலைமை, செல்வாக்கு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு என்பதுபோல ஒரு உணர்வு இருக்கிறது. ஏன் என்றால், இது எல்லாம் தெளிவுபடுத்தப்பட்டு, பெரும் பாலும் அந்தத் துறையைச் சார்ந்த தலைமை ஆசிரியர்கள், பிற ஆசிரியர்கள் குழுக்களிலே பாடத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துக்களும் கூட மறுபடியும் பரி சீலனை செய்யப்பட்டு, ஏதேனும் பாடத் திட்டங்களில் விடுபட வேண்டியது இருக்குமானால், கைவிடவேண்டிய திருக்குமானால் அதைக் கூடப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பாடத் திட்டத்தைச் சுமையாக ஆக்குவது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல. அதைப்போல கேள்வித்தாளை மாணவர்கள் அச்சம் அடைகிற அளவுக்கு கடுமையாக்குவது அரசாங்கத்தினு டைய நோக்கம் அல்ல. மாணவர்களுக்கு, ஏற்கனவே உள்ள, அவர்களுக்கு திருப்தியான கேள்வித்தாள் எந்த முறையில் அமைக் கப்பட்டதோ, அதே முறையில், அமைக்கப்படும் என்றும், நான் இந்த அவையின் மூலமாக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள் கிறேன். கேள்வித்தாளில் புதிய மாற்றங்கள் புகுத்தப்படமாட் டாது. (குறுக்கீடு). மற்ற பாடங்களிலும் ஏற்கனவே உள்ள முறைதான்.

(ஈ) கர்நாடக மாநிலம் உடுப்பியிலுள்ள சட்டக் கல்லூரியில் பயிலும் தமிழ்நாடு மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப் படுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி வேளையிலே எங்களைக் கொஞ்சம் பேச விட வேண்டும். சண்டை போடுகிறவர்களை மாத்திரம் முதலிலே விட்டுவிட்டு, எங்களை கடைசியாகப் பேசவிடுவதைவிட, எங்களை முதலிலே பேசவிட்டுவிட்டு சண்டை போடுகிறவர்களை கடைசி யாகப் பேசவிட்டால் நன்றாக இருக்கும். எனவே, இந்த சீரோ அவரிலே, எங்களை முதலில் விட்டுவிட்டு, சண்டைபோடுகிறவர் களை, கடைசியாக விட்டுவிடுங்கள். நாங்கள் எல்லாம் நின்று கொண்டே இருக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையிலேயிருந்து உங்களுக்கு முதலில் வாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நாங்கள் எப்போதாவது ஒருமுறைதான் கேட்கிறோம்.

இப்போது நான் தெரிவிக்க விரும்புவது, கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுப்பியிலே உள்ள சட்டக் கல்லூரியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு கொடூரமான சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்கிறது, அவர்கள் எல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்ற முறையில் அங்கேயிருந்து தந்தி வந்திருக்கிறது. அதாவது உடுப்பியில் இருக்கிற சட்டக் கல்லூரியில், தமிழ்நாட்டிலேயிருந்து சென்று படிக்கிற மாணவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், இழிவுபடுத்தப்படுகிறார்கள். இதில் உடனடியாக, தமிழ்நாடு சர்க்கார் தலையிட்டு, ஆவன செய்ய வேண்டும் என்று எங்களுக்கு தந்தி வந்திருக்கிறது. எனவே, இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படுகிற அந்நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள், செய்திகள் அரசுக்கு வரவில்லை. ராக்கிங் நடத்துவது பல இடங்களில் வழக்கத்திலே இருக்கின்றன. தமிழ்நாட்டிலே, அது தடை செய்யப்பட்டு இருக்கிறது. எங்காவது நடைபெறுமானால், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ராக்கிங் நடத்தப்படுகிறபோது, எந்த மாநிலத்து மாணவர்கள் என்று எந்த மாணவனும் பார்க்கமாட்டான். அதிலே மாத்திரம் ஜாதி மத வேற்றுமை எல்லாம் கிடையாது. எனவே, ராக்கிங் ஒரு பைத்தியக்காரத்தனமான ஆர்வச் செயல். எனவே, அந்த பைத்தியக்காரத்தனமான ஆர்வச் செயலில் தமிழ்நாட்டு மாணவர்களா, ஆந்திர மாநிலத்து மாணவர்களா, கர்நாடக மாணவர்களா என்று பார்த்து நடந்திருப்பர் என்று நான் கருதவில்லை. ஒருவேளை அப்படி ஒரு பாதிக்கப்பட்ட நிலைமை இருக்குமானால், தமிழக அரசு அந்த அரசுக்குத் தெரிவித்து, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தர கேட்டுக்கொள்ளப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, அங்கேயிருந்து வந்திருக்கிற தந்தியிலே தமிழ்நாட்டு மாணவர்கள் கொடூரப்படுத்தப்படுகிறார்கள் என்றும், இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்றும், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தற்போது தந்தி வந்திருக்கிறது. அங்கேயிருக்கிற மற்ற மாணவர்களைப் பற்றியோ, ராக்கிங் பற்றியோ, எந்த வார்த்தையும் காணவில்லை. அதைப்பற்றி வந்திருக்குமானால், எங்களுக்கும் கொஞ்சம் அரைகுறையாகத் தெரியும் அல்லவா ?

1990 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த ''ராக்கிங்'' கொடூரம் நடைபெறக்கூடாது என்றும், மீறி நடைபெறுமேயானால், அப்படிப்பட்ட மாணவர்கள் அந்தக் கல்வி நிலையங்களில் இருந்து விலக்கப்படுவார்கள் என்றும் கடுமையாக அரசின் சார்பில் எச்சரிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் சொல்வது, கர்நாடக மாநிலத்தைப் பற்றியது. இப்போது இங்கே விவாதிக்கப்பட்ட இந்தச் செய்திகள் பத்திரிகைகளிலே வருமேயானால், அதை வைத்துக்கொண்டு, தீட்சிதர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், அதைப்பற்றிய நடவடிக்கையை கர்நாடகத்தினுடைய மாநில அரசு, அதனுடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

10-40 மணி

(உ) விவசாயக் கடன் நிவாரணம் முழுமையாக அமலாக்கப்படும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலைத் தள்ளிவைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும், அரசு, கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்துவதன் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கிராமிய பொருளாதாரத்தில் ஆதாரமாக இருப்பது கிராமங்களில் இருக்கின்ற விவசாயக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள். அந்தக் கிராமங்களில் வாழக்கூடிய ஏழை விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தினுடைய இந்த அமைப்பில்தான் பங்கு பெறக் கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலில் நிற்க வேண்டுமென்று சொன்னால் அந்தச் சங்கங்களுக்கு ஏதாவது கடன் பாக்கி இருக்கக்கூடாது.

தற்போது மத்திய அரசு ரூ. 10,000 வரையிலான விவசாயக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவினை அமல்படுத்துகின்ற முயற்சிகளில் சில வட்டாரங்களில் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில பேர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களுக்கு அறிவிப்பு வந்திருக்கிறது. சில பேர்களுக்கு இன்னும் வரவில்லை. எனவே, யார் யாருக்கு கடன் தள்ளுபடி என்கின்ற விவரத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையில்கூட நடைமுறையில் ஒழுங்கான ஒரு ஒப்புதல் இல்லை, என நான் நினைக்கிறேன். இந்தச் சூழ்நிலையில், அந்த விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு நிச்சயமாக தேர்தலில் பங்குபெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். எங்கள் மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சம் ஏழை விவசாயிகளுக்கு இந்த பலன் கிடைக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்